



admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 339 | 4 Pages | 5.7.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 339 | 4 பக்கங்கள் | 5.7.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்**

**விளக்கம்:** செல்வம் நிலைக்காத இயல்பை உடையது, அத்தகைய செல்வத்தைப்பெற்றால், பெற்ற அப்போதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும்.

## கானா சுற்றுப்பயணம் முடிந்து டிரினிடாட் அண்டு டுபாகோவுக்கு புறப்பட்ட பிரதமர் மோடி



ஆக்கரா, ஜூலை 5

பிரதமர் மோடி கானா, டிரினிடாட் அண்டு டுபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வருகிறார். இதற்காக அவர் தனி விமானத்தில் நேற்று கானாவுக்கு புறப்பட்டு சென்றார்.

கானாநாட்டின்ஜனாதிபதிஜான்திராமணிமகாமாஅழைப்பின்பேரில் அந்நாட்டுக்கு சென்ற பிரதமர் மோடி விமான நிலையத்தில் சென்றிறங்கியதும் அவருக்கு, அந்நாட்டு முறைப்படி சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. அவரை ஜனாதிபதி மகாமா சிறப்பான முறையில் வரவேற்றார். இதனை தொடர்ந்து பிரதமருக்கு 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க ராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

இந்த பயணத்தில், வரலாற்று தன்மை கொண்ட உறவுகளை ஆழப்படுத்தும் நோக்கில் இரு தலைவர்களும் தங்களுடைய பார்வைகளை பரிமாறி கொண்டனர். முதலீடு, எரிசக்தி, சுகாதாரம், பாதுகாப்பு, திறன்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான புதிய விசயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கானா நாட்டுக்கான பயணம் முடிந்து, டிரினிடாட் அண்டு டுபாகோநாட்டுக்குபிரதமர்மோடி இன்றுமாலைபுறப்பட்டார். அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் நடைபெறும் கூட்டுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், டிரினிடாட் அண்டு டுபாகோ நாட்டுக்கு புறப்பட்டு செல்கிறேன். இன்று மாலை, போர்ட் ஆப் ஸ்பெயினில் சமூகநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள ஆர்வத்துடன் உள்ளேன். நாளை டிரினிடாட் அண்டு டுபாகோ நாட்டின் நாடாளுமன்றத்தில் நடைபெறும் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றுவேன்.

அந்நாட்டுடன் நாம் மிக பழமையான கலாசார தொடர்புகளை கொண்டிருக்கிறோம். மதிப்புமிக்க நட்பு நாட்டுடனான உறவை ஆழப்படுத்துவதற்கான ஆலோசனையை எதிர்நோக்கி இருக்கிறேன் என அவர் பகிர்ந்து உள்ளார்.

## பேனா கேட்டு வீட்டில் உள்ளே புகுந்து ஐ.டி. பெண் ஊழியர் பாலியல் பலாத்காரம்

புனே. ஜூலை 5

புனேநகரில் உள்ள கோந்த்வா பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் 22 வயது பெண் வசித்து வருகிறார். இவர் புனேயில் உள்ள ஒரு தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.) நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறார். இளம்பெண்ணுடன் அவரது சகோதரரும் வசித்து வந்துள்ளார். சகோதரன் வெளியூர் சென்றதால் இளம்பெண் வீட்டில் தனியாக இருந்தார்.

இதை மோப்பம் பிடித்த காமூக ஆசாமி ஒருவர் திட்டமிட்டு ஐ.டி. நிறுவன பெண் ஊழியரை பாலியல் பலாத்காரம் செய்த கொடூர சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு நடந்துள்ளது. அந்த நேரத்தில் மர்மநபர் ஒருவர் கூரியர் டெலிவரி செய்பவர் போல இளம்பெண்ணின் குடியிருப்புக்கு வந்து கதவை தட்டினார். இதையடுத்து பெண் வீட்டின் கதவை திறந்தார்.

அப்போதுவங்கிதொடர்பானஆவணங்கள்கூரியர்மூலம்வந்திருப்பதாக தெரிவித்த ஆசாமி, இதை நீங்கள் பெற்றுக்கொண்டதை உறுதி செய்ய கையெழுத்திடவேண்டும்என்றார்.மேலும்தன்னிடம்பேனாஇல்லாததால் அதை எடுத்து வருமாறு பெண்ணிடம் கூறினார்.

இதையடுத்து பெண் பேனாவை எடுக்க சென்றபோது, மர்மநபர் வீட்டுக்குள் அதிரடியாக நுழைந்து உள்புறமாக கதவை பூட்டினார். திடீரென பெண்ணின் மீது பாய்ந்து பலவந்தப்படுத்தி உள்ளார். பின்பு என்ன நடந்தது என்பது பெண்ணுக்கு நினைவில்லை. அவர் மயக்கம் அடைந்துள்ளார்.

பின்னர் அவர் இரவு 8.30 மணியளவில் கண்விழித்தபோது உடைகள் கலைந்து அலங்கோலமான நிலையில் இருந்ததை கண்டு பெண் அதிர்ச்சி அடைந்தார். கூரியர் நிறுவன ஊழியர் போல நடித்து உள்ளே புகுந்த ஆசாமி தன்னை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு தப்பி சென்றதை உணர்ந்துகொண்டார். மேலும் தனது செல்போனில் இருந்த ஒரு படத்தை பார்த்து பெண் அதிர்ச்சி அடைந்தார்.

காமூகனின் முகத்தின் ஒரு பகுதியும், பெண்ணின் முதுகுப்பகுதியும் தெரியும் வகையில் அந்த ஆசாமி எடுத்துள்ள செல்பி படம் இருந்தது. அதில் மிரட்டல் பதிவும் இடம்பெற்று இருந்து. "இந்த சம்பவம் குறித்து யாரிடமாவது தெரிவித்தால், உனது அந்தரங்க புகைப்படங்களை சமூகவலைதளத்தில் பரப்பி விடுவேன். "மீண்டும் வருவேன்" என்று அந்த ஆசாமி குறிப்பிட்டு இருந்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் இந்த சம்பவம் குறித்து உடனடியாக உறவினர்களிடம் தெரிவித்தார். அவர்களின் உதவியுடன் போலீசிலும் புகார் அளித்தார்.

இதன்பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து போலீசார் விசாரணை நடத்தினர். மேலும் குற்ற செயலில் ஈடுபட்டவர் பாதிக்கப்பட்ட பெண்ணைமயக்கமடையசெய்யஏதாவதுமயக்கஸ்பிரேயைபயன்படுத்தி இருக்கலாம் என்று போலீசார் சந்தேகமடைந்தனர்.

இதைத்தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் மர்மநபரின் வரைபடத்தை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதேபோல குடியிருப்பு கட்டிடத்தில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும் மர்மநபர் மீது பாலியல் பலாத்காரம், குற்றவியல் மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவரை வலைவீசி தேடிவருகின்றனர். இதற்காக போலீஸ் தனிப்படையும் அமைக்கப்பட்டுள்ளது. வீட்டில் தனியாக இருந்த ஐ.டி. பெண் ஊழியர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் புனேயில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கடலில் விழுந்து மீனவர் உயிரிழப்பு; குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூலை 5

மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் அறிவித்து தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

"புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து கடந்த 30.6.2025 அன்று நான்கு நபர்களுடன் INDTN08MM183 என்ற பதிவெண் கொண்ட விசைப்படகில் கடலுக்குள் 12 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன் பிடிக்கச் சென்ற மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம், கொடிகுளம் கிராமம், ராமநகரைச் சேர்ந்த மந்திரமூர்த்தி (வயது 30) த/பெ.பாண்டி என்பவர் எதிர்பாராதவிதமாக கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். கடலில் தவறி விழுந்து உயிரிழந்த



மீனவர் மந்திரமூர்த்தியின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## எடப்பாடி பழனிசாமி சிறப்பு பஸ் மூலம் சூறாவளி சுற்றுப்பயணம்: பிரசார பாடல் வெளியீடு

சென்னை, ஜூலை 5

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சிறப்பு பஸ் மூலம் சூறாவளி சுற்றுப்பயணம் செய்கிறார். அவர் கட்சியினர் வீட்டில் இரவு தங்குகிறார். இந்த பயணத்திற்கான இலச்சினை மற்றும் பிரசார பாடல் இன்று வெளியிடப்படுகிறது. தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான அணியில் பா.ஜனதா இணைந்துள்ளது. இந்த கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணையும் என்றும், நமது கூட்டணி தான் மெகா கூட்டணியாக இருக்கும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். மேலும் அவர், அடுத்த ஆட்சி அ.தி.மு.க. ஆட்சி என்ற முழக்கத்தை எழுப்பி வருகிறார். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்கிறார். முதல்கட்டமாக வருகிற 7ந்தேதி கோவை மேட்டுப்பாளையத்தில் தனது பிரசார பயணத்தை தொடங்கும் அவர் 23ந்தேதி தஞ்சை பட்டுக்கோட்டையில் நிறைவு செய்கிறார். இந்த பயணத்தின் மூலம் அவர் 33 சட்டசபை தொகுதிகளுக்கு சென்று மக்களை சந்திக்கிறார்.

அவரது பிரசார பயணம் தொடர்பான இலச்சினை மற்றும் பாடல் ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை கழக அலுவலகத்தில் இன்று வெளியிடப்படுகிறது. மேலும் பொதுவாக கட்சி தலைவர்கள் தங்களது பயணத்தை வேன் அல்லது காரில் தான் மேற்கொள்வார்கள். ஆனால் எடப்பாடி பழனிசாமி, தனது பயணத்தை பஸ்சில் மேற்கொள்கிறார். அதற்காக பஸ் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பஸ்சில் தான் எடப்பாடி பழனிசாமி சட்டமன்ற தொகுதி வாரியாக செல்கிறார். அந்த பஸ்சில் இருந்தபடி பொதுமக்களையும் சந்திக்கிறார். அதாவது எளிதாக மக்களை கவரவேண்டும் என்பதற்காக பஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர ஒவ்வொரு சட்டசபை தொகுதிகளிலும் ரோடு ஷோ நடக்கிறது. அதில் மக்களோடு மக்களாக எடப்பாடி பழனிசாமி நடந்து செல்கிறார். அதேபோல் கட்சி நிர்வாகி வீட்டில் உணவருந்தும் வகையில் அவரது பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சில இடங்களில் கட்சியினர் வீட்டிலேயே இரவு தங்கவும் திட்டமிட்டுள்ளார்.

## இளம்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு 15 ஆண்டுகள் சிறை



காஞ்சிபுரம் ஜூலை 5

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியத்துக்கு உட்பட்ட அவளூர் கிராமத்தினை சேர்ந்தவர் பிரகாஷ் (வயது 31). இவர் அதே கிராமத்தை சேர்ந்த 20 வயது இளம்பெண்ணை காதலித்து வந்துள்ளார். கடந்த 2.12.2016 அன்று தனது வீட்டிற்கு வரச்சொல்லி திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி கட்டாயப்படுத்தி அப்பெண்ணிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டுள்ளார். பின்னர் திருமணம் செய்து கொள்ளாமல் அடித்தும் மிரட்டியுள்ளார். இது தொடர்பாக கடந்த 13.4.2017 அன்று அந்த இளம்பெண் காஞ்சிபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அந்த பெண்ணின் புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிரகாஷை கைது செய்தனர். இது தொடர்பான வழக்கு காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இவ்வழக்கில் அரசு வழக்குரைஞர் சசிரேகா ஆஜரானார். வழக்கை விசாரித்த மாவட்ட முதன்மை நீதிபதி செம்மல் தீர்ப்பு வழங்கினார். அதில் அவர் கற்பழிப்பு குற்றத்துக்காக 10 ஆண்டுகளும், பெண்ணை மிரட்டியமைக்கு 2 ஆண்டுகளும், பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்தமைக்காக 3 ஆண்டுகளும் சேர்த்து மொத்தம் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.11 ஆயிரம் அபராதமும், அபராதத் தொகையை செலுத்த தவறினால் மேலும் 6 மாதம் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

## திருப்புவனம் அஜித்குமாரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய நயினார் நாகேந்திரன்

சிவகங்கை ஜூலை 5

சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தில் உள்ள கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்த இளைஞர் அஜித்குமார் (வயது 27). இவர் மீது பெண் நிகிதா என்ற பெண் நகை திருட்டு புகார் அளித்தார்.

புகார் தொடர்பாக அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது போலீசார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்த வழக்கு சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், போலீசார் தாக்கியதில் உயிரிழந்த திருப்புவனம் அஜித்குமாரின் வீட்டிற்கு பாஜக மாநிலத்தலைவர் நயினார்நாகேந்திரன் இன்று நேரில் சென்றார். அவர் அஜித்குமாரின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும், அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு நயினார் நாகேந்திரன் ஆறுதல் கூறினார்.



## தமிழகத்தையே அழவைத்த ரிதன்யாவின் கடைசி சிரிப்பு.. நெஞ்சை உலுக்கும் காட்சி

திருப்பூர், ஜூலை 5

திருப்பூர் மாவட்டம் அவினாசி கைகாட்டி புதூரை சேர்ந்தவர் அண்ணாதுரை. தொழில் அதிபர். இவருடைய மனைவி ஜெயசுதா. இவர்களுடைய மகள் ரிதன்யா (வயது 27). இவருக்கும், அதே பகுதியை சேர்ந்த ஈஸ்வரமூர்த்திசித்ராதேவி தம்பதியின் மகன் கவின்குமார் (27) என்பவருக்கும் கடந்த ஏப்ரல் மாதம் 11ந் தேதி திருமணம் நடைபெற்றது.

நிச்சயதார்த்தத்தின் போது தனது மகளுக்கு 300 பவுன் நகை, சொகுசு கார் வாங்கி தருவதாக அண்ணாதுரை கூறியுள்ளார். முதற் கட்டமாக திருமணத்தின் போது, 100 பவுன் நகையும், ரூ.62 லட்சத்தில் சொகுசு காரும் வாங்கி கொடுத்து உள்ளனர். அதன்பிறகு 200 பவுன் நகையை எப்போது கொடுப்பார்கள் என்று கவின்குமார் மனைவியிடம் கேட்டு அவரை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் கொடுமை படுத்தியதாக கூறப்படுகிறது. மேலும் மாமனார், மாமியாரும் சேர்ந்து தொந்தரவு செய்ததாக தெரிகிறது. இதனால் மனம் உடைந்த ரிதன்யா கடந்த 28ந்தேதி வீட்டை விட்டு காரில் சென்று, செட்டிபுதூர் பகுதியில் விஷம் குடித்து, காருக்குள்ளேயே தற்கொலை செய்து கொண்டார். ரிதன்யா தற்கொலைக்கு முன்பு தனது தந்தைக்கு வாட்ஸ்அப்பில் அழுதபடி தன் சாவிற்கு தனது கணவன் மற்றும் மாமனார், மாமியார் தான் காரணம் என்று உருக்கமாக அனுப்பிய ஆடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து, கவின்குமார், ஈஸ்வரமூர்த்தி, சித்ராதேவி ஆகியோரை கைது செய்தனர்.



இந்தநிலையில், ரிதன்யா வரதட்சணை கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட விவகாரம், வரதட்சணையாக கொடுக்கப்பட்ட நகைகள் மற்றும் காரின் படங்கள் வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தை அழ வைத்த ரிதன்யா கடைசியாக சிரித்த முகத்துடன் புது காரில் செல்லும் காட்சி வெளியாகி உள்ளது.

ரிதன்யா திருமணத்தின்போது எடுத்த புகைப்படங்களில் அவர் சிரித்தபடி இருப்பது அவரது கடைசி சிரிப்பாக பார்க்கப்படுகிறது. இந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு, பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. திருமணத்தின் போது எடுக்கப்பட்ட இந்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



# தாம்பரம்-நாகர்கோவில் சிறப்பு ரெயில் சேவை 2 வாரம் நீட்டிப்பு

சென்னை ஜூலை 5
தாம்பரம்-நாகர்கோவில் இடையேவாராந்திர ரெயில் இயக்கப்பட்டு வருகிறது.
அந்த வகையில், நாகர்கோவிலில் இருந்து தாம்பரத்திற்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும், தாம்பரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு திங்கட்கிழமைகளிலும் இந்த சிறப்பு ரெயில் இயக்கப்பட்டு வந்தது.
அதன் சேவை காலம் நிறைவடைவதையொட்டி, மேலும் 2 வாரத்திற்கு நீட்டித்து தெற்கு ரெயில்வே அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:
தாம்பரம்-நாகர்கோவில் இடையேயான சிறப்பு வாராந்திர ரெயில் சேவை 2 வாரம் நீட்டிக்கப்படுகிறது. அதன்படி, நாகர்கோவிலில் இருந்து தாம்பரத்திற்கு (வ.எண்06012) வரும் 6 மற்றும் 13ந் தேதிகளிலும் (ஞாயிற்றுக்கிழமை), தாம்பரத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு (06011) வரும் 7 மற்றும் 14ந் தேதிகளிலும் (திங்கட்கிழமை) சிறப்பு ரெயில் சேவை நீட்டிக்கப்படுகிறது.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜூன் 30ந்தேதிக்குள் கை விரல் ரேகை பதியாதவர்களின் ரேஷன் கார்டுகள் செல்லாதா? தமிழக அரசு விளக்கம்

தஞ்சாவூர் ஜூலை 6
தஞ்சாவூர் மாவட்டத்தில் வாட்ஸ்அப்உள்ளிட்ட ஊடகங்களில் தகவல் ஒன்று பரவி வருகிறது. அதில் "தஞ்சாவூர் மக்களே ஜூன் 30ந்தேதிக்குள் ரேஷன் கார்டுடன் ஆதார், மொபைல் எண், கைரேகை, இறந்தவர் பெயர் நீக்கம் போன்றவற்றை அப்டேட் செய்யாவிட்டால் ரேஷன் கார்டு செல்லாது" என்று அதில் கூறப்பட்டுள்ளது.
இது உண்மையா? பொய்யா? என்று தெரியாமல் தஞ்சாவூர் மக்கள் குழப்பம் அடைந்துள்ள நிலையில், இதுகுறித்து தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் அதற்கு விளக்கம் அளித்துள்ளது. அதில், "இது தவறான தகவலாகும். ஏ.ஏ.ஓய். மற்றும் பி.எச்.எச். குடும்ப அட்டைதாரர்கள் கட்டாயமாக அனைத்து குடும்ப உறுப்பினர்களின் கை விரல் ரேகையை பதிவு செய்வது அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.



அதற்கான கடைசி தேதி வரையறுக்கப்படவில்லை. சமூக ஊடகத்தின் மூலம் வரப்பெற்ற செய்தியில் உண்மை ஏதுமில்லை என்று தஞ்சாவூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தெரிவித்துள்ளார். தவறான தகவலைப் பரப்பாதீர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிகிதாவுக்கும் எனக்கும் திருமணம் நடந்தது உண்மை... திருமாறன் பரபரப்பு பேட்டி

சிவகங்கை, ஜூலை 5
போலீசார் அடித்துக் கொன்ற திருப்புவனம் காவலாளி அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துவிட்டுவெளியே வந்த தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் திருமாறன் செய்தியாளர்களிடம்கூறியதாவது:
கடந்த 21 ஆண்டுகளுக்கு முன்பே நிகிதாவை எனக்கு தெரியும். நிகிதா 4 திருமணங்களை செய்து யாருடனும் வாழவில்லை. எனக்கும், நிகிதாவுக்கும் திருமணம் நடந்தது உண்மை. ஆனால், அன்றைய இரவு பால் பழம் சாப்பிட சென்றபோது அவர் சென்றுவிட்டார். மறுநாள் நாங்கள் அவரது வீட்டிற்கு சென்று கேட்டபோது, தகராறு நடந்தது. எனக்கு முன்னால் 3 பேருடன் அவருக்கு திருமணம் நடந்துள்ளது. இந்த நிகிதாதான் என எனக்கு தெரிந்திருந்தால், நான் முதலிலேயே வந்திருப்பேன்.
திருமணம் முடிந்தபின்னர் மாப்பிள்ளையின் குடும்பத்தினர் மீது வரதட்சணை கொடுமை வழக்கு கொடுப்பதை வேலையாக நிகிதா குடும்பத்தினர் வைத்திருந்தனர். திருமணம் செய்து கொள்ளும் மாப்பிள்ளையின் குடும்பத்தையே சித்ரவதை செய்வார்கள். இதில் பலரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். வரதட்சணை வழக்கு பதிவு செய்ய வைத்து, மிரட்டி பணம் பறிப்பது தான் அவர்களின் வேலை. அதுபோல், வேலை வாங்கித்தருவதாக மோசடி செய்வதையும் வழக்கமாக கொண்டிருந்தனர்.
அஜித்குமாரை அழைத்து விசாரித்தபோது, அவர் மீது இதற்கு முன்பு வழக்கு இருக்கிறதா என்பதை அறிந்திருக்க வேண்டும். மேலும் புகார் அளித்தவர் யார் என்பதையும் விசாரித்திருக்க வேண்டும். நிகிதா பல மோசடிகளில் ஈடுபட்டவர். அதுபற்றி





ஆய்வு செய்யாமல், அஜித்குமாரை தாக்கியது தண்டனைக்குரிய குற்றமாகும்.
வழக்குகளில் அதிகாரிகளை வைத்து அவர் கொடுக்கும் அழுத்தம் அன்றைய காலகட்டத்திலும் இருந்தது. மாப்பிள்ளை வீட்டில் திருமணத்துக்கு கோடிக்கணக்கில் செலவு செய்வார்கள். ஆனால், நிகிதாவின் குடும்பத்தில் 10 பேருக்கு மேல் வரமாட்டார்கள். நிச்சயம் செய்வார்கள். 15 நாளில் அவசர அவசரமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்து திருமணத்தை முடிப்பார்கள்.
அஜித்குமாருடன் ஏற்பட்ட ஈகோ பிரச்சினையில்தான் அவரை நிகிதா சிக்க வைத்திருக்கிறார். அந்த பெண்ணின் தந்தை சப்கலெக்டர், தாயார் அரசு ஊழியர். தனது ஊரில் உள்ள பல பேரை ஏமாற்றி இருக்கிறார்கள். அன்றைய காலகட்டத்தில் சூப்பிரண்டாகவும், துணை சூப்பிரண்டாகவும் இருந்தவர்கள் அந்த குடும்பத்தினருக்கு உடந்தையாக இருந்தனர். பாதிக்கப்பட்ட அஜித்குமார் வழக்கில் நிகிதா, அவரது தாயார் சிவகாமி ஆகியோரை சேர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# போதைப்பொருள் வழக்கில் மேலும் இருவர் கைது

சென்னை, ஜூலை 5
கொகைன் போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில், நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் சென்னை நுங்கம்பாக்கம் போலீசாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். நடிகர் ஸ்ரீகாந்தை ஜூலை 7ந்தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.
இதற்கிடையே தனக்கு ஜாமீன் கோரி சென்னை போதைப்பொருள் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் ஸ்ரீகாந்த்



மனு தாக்கல் செய்து இருந்தார். அதேபோல, இதே வழக்கில் கைதான மற்றொருநடிகர்கிருஷ்ணாவும் தனக்கு ஜாமீன் அளிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனுக்களை நேற்று விசாரித்த சிறப்பு கோர்ட்டு, நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.
இந்த நிலையில், நடிகர்கள் ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணாவுக்கு போதைப்பொருட்களை விநியோகம் செய்த வழக்கில் அரவிந்த் பாலாஜி, சுபாஷ் ஆகிய மேலும் 2 பேரை அரும்பாக்கம் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைது செய்யப்பட்ட இருவரும் போதைப்பொருள் சப்ளையர் கெவினின் கூட்டாளிகள் என போலீசார் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# பச்சிளம் குழந்தையை கவ்வி சென்ற தெருநாய்... அரியலூரில்



அரியலூர், ஜூலை 5
அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே ஆர். எஸ். மாத்தூர் கிராமம் உள்ளது. இங்குள்ள தனியார் திருமண மண்டபத்தின் பின்புறம் உள்ள குப்பை மேட்டில் பிறந்து சில மணிநேரமே ஆன பச்சிளம் பெண் குழந்தை இறந்து கிடந்துள்ளது. இதனை மோப்பம் பிடித்த தெருநாய் ஒன்று அந்த குழந்தையின் உடலை வாயில் கவ்விக் கொண்டு ஓடியது.
இதனைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் அந்த நாயை விரட்டினர். அதனைத் தொடர்ந்து அந்த நாய் குழந்தையின் உடலை கீழே போட்டு விட்டு ஓடியது. இதையடுத்து, அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலின் பேரில் குவாகம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த குழந்தையின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.
மேலும்,இந்தகுழந்தை யாருடையது?. இறந்து பிறந்ததா?, கள்ளத்தொடர்பால் பிறந்ததா? அல்லது அந்த குழந்தையை கொலை செய்து குப்பை மேட்டில் வீசி சென்றார்களா? என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.
இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# தேச நலனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த விவேகானந்தர் நினைவைப் போற்றி வணங்குகிறோம் அண்ணாமலை

சென்னை, ஜூலை 5
முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:
நமது நாட்டின்கலாச்சாரத்தையும்,, உயரிய ஆன்மிகக் கோட்பாடுகளையும், உலக அரங்கில் கொண்டு சென்று பெருமை சேர்த்த வீரத்துறவி, சுவாமி விவேகானந்தரின் நினைவுதினம் இன்று.
ஒட்டு மொத்த தேசத்திற்கும் ஆன்மிக வழிகாட்டியாக, கலங்கரை விளக்கமாக வெளிச்சம் கொடுத்தவர். ஆழ்ந்த சிந்தனைவாதியாகவும், பன்மொழிப் புலமை கொண்டவராகவும் திகழ்ந்தவர். தன்னுடைய ஆழ்ந்த ஆன்மிகம் மற்றும் தேசபக்தி உரைகளால் இளைஞர்களை ஊக்கப்படுத்தி, அவர்களை சிறந்த சிந்தனையாளர்களாக உருவாக்கியவர். தேச நலனுக்காகவும், ஏழை எளிய மக்கள் முன்னேற்றத்திற்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த சுவாமி விவேகானந்தரின் நினைவைப் போற்றி வணங்குகிறோம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கவுரவ விரிவுரையாளர்களுக்கு வழங்க வேண்டிய 3 மாத சம்பளத்தை உடனடியாக வழங்க வேண்டும் ஓ. பன்னீர்செல்வம்

சென்னை ஜூலை 5
தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:
கடந்த நான்கு ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் அரசுத் துறைகளில் பணிபுரியும் ஏதாவது ஒரு பிரிவினருக்கு சம்பளம் தாமதப்படுத்துவது என்பது வழக்கமாக இருந்து வருகிறது. விதைச் சான்றளிப்புத் துறையில் பணிபுரிந்தவர்களுக்கு 2022ம் ஆண்டு நான்கு மாதம் சம்பளம் வழங்காமல் இருந்தது. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் நிரந்தர ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 2024ம் ஆண்டு சம்பளத்தை தாமதமாக வழங்கியது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு மூன்று மாதமாக சம்பளம் வழங்காதது என்ற வரிசையில் தற்போது கவுரவ விரிவுரையாளர்களுக்கு மூன்று மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை.
தமிழ்நாட்டிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆயிரக்கணக்கான கவுரவ விரிவுரையாளர்கள் பல ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றனர். இவர்களால் தான் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், இவர்களுடைய பணி இதுநாள் வரை நிரந்தரம் செய்யப்படவில்லை. இவர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மாதம் 57,500 ரூபாய் ஊதியம் 12 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதனை சென்னை ஐகோர்ட்டு உத்தரவிற்குப் பிறகும் தி.மு.க. அரசு செயல்படுத்தவில்லை. இவர்களுக்கு மாதம் வெறும் 25,000 ரூபாய் வீதம் 11 மாதங்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படுகிறது. இப்போது இந்த ஊதியத்திற்கும் பங்கம் ஏற்பட்டு இருக்கிறது. கடந்த மூன்று மாத காலமாக இந்த ஊதியமும் வழங்கப்படவில்லை. இது கடும் கண்டனத்திற்குரியது. தி.மு.க. அரசின்நிர்வாகத் திறமையின்மைக்கு இது ஓர் உதாரணம்.



தமிழ்நாட்டில் பணிபுரியும் கவுரவ விரிவுரையாளர்களின் விபரங்கள் கல்லூரி கல்வித் துறை இயக்குநருக்கு மே மாதமே அனுப்பப்பட்டு விட்டதாகவும், இதன் அடிப்படையில் 202 கோடி ரூபாய் நிதி கோரி கல்லூரி கல்வித்துறை நிதித் துறைக்கு கடிதம் அனுப்பிய தன் பேரில் நிதித் துறையும் இதற்கான ஒப்புதலை வழங்கிவிட்டது என்றும், இருப்பினும் இதற்கான நிதியை உயர் கல்வித்துறை விடுவிக்காததால் கவுரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளம்கூட வழங்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கவுரவ விரிவுரையாளர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். இதன் விளைவாக கவுரவ விரிவுரையாளர்கள் நிதி நெருக்கடிக்கு ஆளாகி, வட்டிக் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒதுக்கப்பட்ட நிதியை ஒழுங்காக மாதா மாதம் கவுரவ விரிவுரையாளர்களுக்கு அளிக்க இயலாத திறமையற்ற நிர்வாகம் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருப்பது வேதனை அளிக்கிறது.
முதல்அமைச்சர் இதில் தனிக் கவனம் செலுத்தி, கவுரவ விரிவுரையாளர்களுக்கு வழங்க வேண்டிய மூன்று மாத சம்பளத்தை உடனடியாக வழங்கிட ஆவன செய்யவும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற தாமதத்தை தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.
இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# போலீசார் சிவில் வழக்குகளில் ஏன் தலையிடுகின்றனர்? ஐகோர்ட்டு கேள்வி

மதுரை, ஜூலை 5
சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளைக்குட்பட்ட மாவட்டங்களில், சிவில் வழக்குகளில் காவல்துறையினர் தலையீடு செய்வதாகவும், அதற்கு தடைவிதிக்க உத்தரவிடக்கோரியும் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்களை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி புகழேந்தி விசாரணை செய்து வருகிறார்.
இது தொடர்பாக கடந்த முறை நடந்த விசாரணையின்போது நீதிபதி பல்வேறு கேள்விகளை எழுப்பினார். குறிப்பாக, "ஐகோர்ட்டு மற்றும் சுப்ரீம் கோர்ட்டு சிவில் வழக்குகளில் காவல்துறையினர் தலையீடு செய்யக்கூடாது என பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. மேலும், தமிழ்நாடு காவல்துறை தலைவரின் (டி.ஜி.பி.) சுற்றறிக்கையின்படி, சிவில் வழக்குகளில் போலீசார் தலையிடக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.
ஆனாலும், போலீசார் தொடர்ந்து சிவில் வழக்குகளில் ஏன் தலையீடு செய்து வருகின்றனர்? இதுகுறித்து தமிழகஅரசின்நிலைப்பாடு என்ன? என்று உள்துறைச் செயலர் மற்றும் டி.ஜி.பி. பதிலளிக்க வேண்டும்" என்று நீதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, இந்த அனைத்து வழக்குகளும் இன்று மீண்டும் நீதிபதி புகழேந்தி அமர்வில்



விசாரணைக்கு வந்தன.
அப்போது தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வக்கீல் ஹசன் முகமது ஜின்னா ஆஜராகி, "சிவில் வழக்குகளில் போலீஸ் தலையிடக்கூடாது என காவல்துறை தலைவர் (டி.ஜி.பி.) ஏற்கெனவே சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறார். அதையும் மீறி சில காவல்துறையினர் தலையீடு செய்வது வருத்தத்திற்குரியது. ஒரு சிலர் மட்டுமே இதுபோல் நடந்து கொள்கின்றனர். எனவே, இந்த குறைபாடுகளை எவ்வாறு சரி செய்ய முடியும் என்பது குறித்து தமிழக காவல்துறை தலைவருடன் ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.
இந்த குற்றச்சாட்டுகள் குறித்து முறையாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க, ஐ.ஜி. அந்தஸ்தில் இருக்கும் மூத்த காவல்துறை அதிகாரி, மூத்த கூடுதல் அரசு குற்றவியல் வக்கீல் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட இருக்கிறது" என்று தெரிவித்தார். அரசு தரப்பு வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி, வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தார்.

# முந்திரி விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும் நயினார் நாகேந்திரன்

சென்னை ஜூலை 5
தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:
கடலூர் மாவட்டத்தில் மலையடிக்குப்பம், வெ. பொத்தாங்குப்பம், கொடுக்கன் பாளையம், கீரப்பாளையம் ஆகிய கிராமங்களில் 5 தலைமுறைகளாக அரசு தரிசு நிலத்தில் முந்திரி பயிர் செய்து வரும் விவசாயிகளை சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் எனக் கூறி 9,000 மரங்களை வேரோடு பிடுங்கி எறியப் பார்ப்பது மிகுந்த அதிர்ச்சியையும் மன வேதனையையும் அளிக்கிறது.
விவசாயிகள் தங்கள் பிள்ளை போல் கண்ணுங்கருத்துமாக கவனித்த மரங்களைத் தோல் தொழிற்சாலை அமைப்பதற்காக வெட்டுவது அநியாயம் இல்லையா? கிட்டத்தட்ட 200 ஆண்டுகளாக விவசாயிகள் அந்த நிலத்தைப் பயன்படுத்தி வரும் நிலையில், விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதுஉழவர்நலனா? அல்லது பிடுங்கி எறிவது உழவர் நலனா?
தொடர்ந்து மாம்பழ விவசாயிகள், முந்திரி விவசாயிகள் என அனைத்து தரப்பட்ட வேளாண் குடிகளையும் வதைத்துவிட்டு, "நான் டெல்டாக்காரன்" என்று முழங்குவது முறையா என்பதை முதல்வர் மு.க. ஸ்டாலின் சிந்திக்க வேண்டும். இனியும் காலந்தாழ்த்தாது முந்திரி விவசாயிகளுக்கு பட்டா வழங்கி அவர்களின் மரங்களைக் காத்து வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும்!
இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாடு: இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் குவிந்த பக்தர்கள்

விருதுநகர் ஜூலை 5
வெள்ளிக்கிழமையை முன்னிட்டு அம்மன் கோவில்களில் இன்று வழக்கத்தைவிட பக்தர்கள் அதிக அளவில் வருகை தந்து சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றனர்.
விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் இன்று அதிகாலையிலேயே ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். இன்று அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. பின்னர்



அம்மனுக்கு மஞ்சள், பால், பன்னீர், தேன் பல்வேறு வகையான பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது.
அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். சிறப்பு வழிபாடுகளில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.
தென் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தியும், அக்கினி சட்டி எடுத்தும், அலகு குத்தியும் வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

# தூத்துக்குடி: 7ம்தேதி அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கு உள்ளூர் விடுமுறை கலெக்டர் அறிவிப்பு

தூத்துக்குடி ஜூலை 5
தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:
தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவில் குடமுழுக்கு நன்னீராட்டு விழா 7.7.2025, திங்கட்கிழமை அன்று நடைபெற உள்ளதால், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கு மட்டும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது. எனினும், 7.7.2025 அன்று அரசு தேர்வுகள் ஏதேனும் அறிவிக்கப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட மாணவ/ மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய பணியாளர்களுக்கும் இவ்விடுப்பு பொருந்தாது என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த விடுமுறைக்குப் பதிலாக 19.7.2025, மூன்றாம் சனிக்கிழமை அன்று அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கு மட்டும் வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரி இடையே விரைவில் தேசிய நெடுஞ்சாலை

தூத்துக்குடி ஜூலை 6
தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி வரை சுமார் 120 கி.மீ. தூரத்துக்கு விரைவில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட உள்ளது. இந்த சாலை தற்போது உள்ளசாலையில்இருந்து தனியாக அமைக்கப்படுவதால் இதற்காக சுமார் 600 எக்டேர் வரை நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது.
இந்த பணிக்காக தாசில்தார்கள் நியமிக்கப்பட்டு, எந்தெந்த சர்வே எண்களில்உள்ள நிலங்கள் வழியாக சாலை அமைய உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். இந்த ஆய்வு முடிந்த பிறகு நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டு சாலை அமைக்கும் பணி விரைவுபடுத்தப்படும்.




இந்த நெடுஞ்சாலை அமைந்தால் தென்மாவட்டங்களில் போக்குவரத்து வசதி பெருகும், சுற்றுலா வளர்ச்சி மேம்படும் என நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# மூளையில் ரத்த கசிவு, சிகரெட்டால் சூடு.. இளைஞர் அஜித்குமார் பிரேதபரிசோதனை அறிக்கையில் அதிர்ச்சி தகவல்கள்


சிவகங்கை, ஜூலை 5

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்தவர் அஜித்குமார் (வயது 27). இந்தநிலையில் நகைத்திருட்டு வழக்கு தொடர்பாக, அஜித்குமாரை விசாரணைக்கு அழைத்து சென்ற போலீசார், அவரை கடுமையாக தாக்கினர். இதில் மயங்கி விழுந்து அஜித்குமார் உயிரிழந்தார். தமிழகத்தையே உலுக்கிய இந்த சம்பவத்துக்கு எதிர்க்கட்சியினர் கடும் கண்டனங்களை தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, இதில் தொடர்புடையதாக கூறப்படும் தனிப்படை போலீஸ்காரர்களான பிரபு, கண்ணன், சங்கர மணிகண்டன், ராஜா, ஆனந்த் ஆகியோர் மீது கொலை வழக்கு பதிவு செய்து, கைது செய்யப்பட்டனர்.

மேலும் சிவகங்கை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக இருந்த ஆஷிஸ் ராவத் இடமாற்றம் செய்யப்பட்டு, கட்டாய காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டார். மானாமதுரை துணை போலீஸ் சூப்பிரண்டு சண்முகசுந்தரம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

அஜித்குமார் மரண வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கக்கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் மனுதாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த கோர்ட்டு, போலீசாருக்கு சரமாரி கேள்விகளை கேட்டு, கடும் கண்டனத்தையும் பதிவு செய்தது. இதனிடையே இந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்றி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். போலீசாரின் அத்துமீறிய தாக்குதலே இந்த மரணத்துக்கு காரணம் என்று பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்தனர்.



இந்நிலையில் மடப்புரம் இளைஞர் அஜித்குமாரின் பிரேதபரிசோதனை அறிக்கையில்திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அஜித்குமார் உடலின் வெளிப்புறத்தில் சிராய்ப்பு காயங்கள் என 44 காயங்களும், ரத்த கட்டுக் காயங்களும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டதும், சிகரெட்டால் சூடு வைத்ததும் அம்பலமாகி உள்ளது. இதுதொடர்பாக வெளியான தகவல்படி: 1. சுமார் 50 வெளிப்புற காயங்கள்

இது மிக அதிகமான உடற்காயங்களை குறிக்கிறது. இந்த அளவிலான காயங்கள் ஒரே நேரத்தில் அல்லது தொடர்ச்சியாக ஏற்பட்டிருக்க வாய்ப்பு அதிகம்.

பொதுவாக, காவல் சித்திரவதை அல்லது சட்ட விரோத விசாரணைகளில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் காயங்கள் ஏற்படுவது அதீதமான வன்முறையை காட்டுகிறது.

2. இதில் 12 சிராய்ப்பு காயங்கள்

சிராய்ப்பு காயம் என்பது தோலில் சுரண்டல், உராய்வு அல்லது தடிமனாக்கம் போன்ற காயங்கள்.

இது நகத்தால் கீறுதல் தரையில் இழுத்தல், அல்லது கடினமான பொருளால் தாக்குதல் என்பவற்றால் ஏற்படலாம்.

சிராய்ப்பு காயங்கள் பல இடங்களில் இருப்பது, உடலை தரையில் இழுத்தல் அல்லது கட்டுப்பாட்டுக்குள் வைக்க போராடியதைக் காட்டுகிறது.

3. மீதி அனைத்தும் ரத்த கட்டு எனும் கன்றிய காயங்கள்

ரத்தக்கட்டு என்பது உடலில் உள்ள சதையை கடுமையாக அடித்ததனால் ஏற்படும் நீல/கருப்பு நிறமான காயம்.

இதுதாக்குதலின்இடத்தில் நரம்பு நசைப்பு, சதை அடிதடி போன்ற தாக்கங்களை விளக்குகிறது.

4. கன்றிய காயங்கள் ஒவ்வொன்றும் வெறும் ஒற்றை காயங்கள் அல்ல

அதாவது ஒரு காயமாக பதிவுசெய்யப்பட்டிருந்தாலும், அதன் உள் பகுதிகளில் பல தாக்கங்கள் உள்ளன.

இந்தவகையானகாயங்கள் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக தாக்குதல் நடைபெற்றதை காட்டுகிறது. இது சித்திரவதையின் திட்டமிட்ட தன்மையையும் காட்டுகிறது.

5. காயங்கள் பல்வேறு கோணங்களில் உள்ளன

இந்த கோணங்கள் தாக்கங்கள் பல்வேறு விதங்களில், பல்வேறு பொருட்களால் இரும்பு பிளாஸ்டிக் பைப் ரப்பர் போன்ற ஆயுதங்களால் செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

இது ஒருவரை கட்டி வைத்து, பலபேர் பல இடங்களில் தாக்கியிருப்பதற்கான சாத்தியத்தையும் தருகிறது.

6. வயிற்றின் நடுவே கம்பை வைத்து குத்திய காயம் உள்ளது

இது மிகவும் ஆபத்தான காயம். வாயிற்குள் அல்லது குடல் பகுதிக்குள் ஊடுருவியிருக்கும் வாய்ப்பு இருக்கிறது.

இத்தகைய காயம் உயிருக்கு ஆபத்து தரக்கூடியதாக இருக்கலாம்.

7. தலை கபாலத்தில் அடியும், உள்ளே மூளையில் ரத்த கசிவும் உள்ளது.

இது தலையில் ஏற்பட்ட படுகாயம். கபால எலும்பில் அடிபட்டால், அது மூளை பாதிப்பிற்கும் வழிவகுக்கலாம்.

இது பிரேத பரிசோதனைக்குமிகமுக்கியமான விஷயம். மரணம் நேர்ந்ததற்கான நேரடி காரணமாகஇதுஇருக்கவாய்ப்பு அதிகம்.

8. சிகரெட் சூடு வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளது

இது மிக தீவிரமான சித்திரவதை முறைகளில் ஒன்று. இது முற்றிலும் மனித உரிமைகளை மீறும் செயல். சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது.

இந்த சித்திரவதை திட்டமிட்டு, தொடர்ந்து, பல மணி நேரங்கள் நடந்து இருக்கக்கூடியது.

உடல் முழுவதும் தாக்கங்கள் இருப்பதால், தனி நபரால் மட்டும் செய்யப்பட்டது எனச் சொல்ல முடியாது. இது தீவிர காவல் சித்திரவதை, மற்றும் சட்டவிரோத விசாரணை, அல்லது படுகொலை எனக் உறுதி படுத்தும் வகையில் உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 19,286 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர், ஜூலை 5

கர்நாடக மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததன் காரணமாக அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவ்வாறு திறக்கப்பட்ட தண்ணீர் தமிழக கர்நாடக எல்லைப்பகுதியான பிலிகுண்டுலுவை கடந்து ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணைக்கு வந்தடைகிறது.

இதன் காரணமாக மேட்டூர்அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசன தேவைக்காக கடந்த மாதம் 12ந் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதனிடையே அணைக்கு நீர்வரத்து தண்ணீர் திறப்பை விட மேலும் அதிகரித்தது. இதன் காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்தது.



கடந்த மாதம் 29ந் தேதி மாலையில் இந்த ஆண்டில் முதன்முறையாக மேட்டூர் அணை 120 அடியை எட்டி நிரம்பியது. அணை நிரம்பிய நிலையில் அணைக்கு நீர்வரத்தானது மேலும் அதிகரித்தது. இதன்காரணமாக அணையின் உபரிநீர்போக்கியான 16 கண் மதகுகள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இந்த நிலையில் அணைக்கு நீர்வரத்தானது கடந்த 2 நாட்களாக படிப்படியாக குறைந்து வருகிறது. நேற்றுமாலைஅணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரத்து 615 கனஅடியாக குறைந்தது.

காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் தேவை வினாடிக்கு 24 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

இதன் காரணமாக அணையை ஒட்டி நீர்மின் நிலையங்கள் வழியாக வினாடிக்கு 22 ஆயிரத்து 300 கனஅடி வீதமும், அணையின் உபரிநீர் போக்கியான 16 கண் மதகுகள் வழியாக வினாடிக்கு 1,700 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

கால்வாய் பாசன தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணைக்கு வரும் நீர்வரத்தை விட அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணை நீர்மட்டம் குறைய தொடங்கி உள்ளது.

நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 119.80 அடியாக குறைந்தது. அதாவது கடந்த 3 நாட்களுக்கு பிறகு அணையின் நீர்மட்டம் 120 அடிக்கு கீழ் குறைந்திருந்தது.

இந்நிலையில் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 18,615 கன அடியிலிருந்து 19,286 கன அடியாக அதிகரித்துள்ளது. காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 119.60 அடியாக சரிந்துள்ளது. அணையிலிருந்து மொத்தம் 24,000 கன அடி நீர் தற்போது வெளியேற்றப்பட்டு வருகிறது.

# வகுப்பறையில் காதலியுடன் வீடியோ கால்: கண்டித்த கல்லூரி நிர்வாகம் மாணவர் எடுத்த விபரீத முடிவு

கன்னியாகுமரி, ஜூலை 5

கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர் ஜான் சாக்கோ (20). இவர், சென்னை, அண்ணா நகரில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து குன்றத்தூர் அடுத்த சோமங்கலத்தில் உள்ள தனியார் கல்லூரியில் இன்ஜினியரிங் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில், இவர் நேற்று கல்லூரி நிர்வாகத்தின் மீது புகார் அளிக்க குன்றத்தூர் காவல் நிலையம் வந்தார். புகார் அளித்து விட்டு, திடீரென காவல் நிலையத்திலேயே மயங்கி விழுந்தார்.

இதை கண்டதும் அங்கு பணியில் இருந்த காவலர்கள் அவரிடம் கேட்ட போது, கழிவறை சுத்தம் செய்ய பயன்படுத்தும் பினாயில் மற்றும் எலி மருந்தை கலந்து குடித்து விட்டு வந்ததாக தெரிவித்தார். இதை கேட்டதும் அதிர்ச்சி அடைந்த காவலர்கள், உடனடியாக அந்த மாணவனுக்கு முதலுதவிஅளித்துவிட்டு, சிகிச்சைக்காககுரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர், மேல் சிகிச்சைக்காக சென்னை, ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு மாணவனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து குன்றத்தூர் போலீசார் விசாரணை மேற்கொண்ட போது, கல்லூரியில் படித்து வந்த மாணவன் ஜான் சாக்கோ வகுப்பறையிலேயே தான் காதலிக்கும் பெண்ணிடம் செல்போனில் வீடியோ கால் பேசியதாகவும், இது குறித்து பேராசிரியர்கள் கண்டித்த நிலையில், மீண்டும் அதே போன்று மாணவன் செய்ததாக கூறப்படுகிறது.

எனவே, மாணவனை கல்லூரியில் இருந்து நீக்கி, வீட்டில் இருந்தே தேர்வு எழுதுமாறு கல்லூரி நிர்வாகம் கூறியதாக கூறப்படுகிறது. தற்போது மூன்றாம் ஆண்டு பயில்வதற்காக கல்லூரிக்கு சென்ற நிலையில் கல்லூரியில் சேர்க்காததால் ஆத்திரமடைந்த ஜான் சாக்கோ பினாயில் மற்றும் எலி மருந்து குடித்து விட்டு குன்றத்தூர் காவல் நிலையத்தில் கல்லூரி நிர்வாகத்தின் மீது புகார் அளித்து விட்டு மயங்கி விழுந்தது தெரியவந்தது.

இந்த சம்பவம் குறித்து குன்றத்தூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. புகார் அளித்துவிட்டு மாணவன் மயங்கிய சம்பவத்தையடுத்து அதன் உண்மைத் தன்மையை கண்டறிய காவல் நிலையத்தில் இருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகள் அடங்கிய டிவிஆர் பெட்டியை காவல்துறை உயரதிகாரிகள் எடுத்துச் சென்று சோதனை செய்து வருகின்றனர்

# குளித்துக் கொண்டிருந்த இளம்பெண்ணிடம் வீடு புகுந்து பாலியல் சில்மிஷம்: போலீஸ்காரர் கைது

தென்காசி, ஜூலை 5

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் தாலுகா குருவிகுளம் அருகே உள்ள அழகுநாச்சியார்புரம் கிராமத்தை சேர்ந்தவர் மனோகுமார் (வயது 29). இவர் தென்காசி ஆயுதப்படையில் போலீஸ்காரராக பணியாற்றி வருகிறார். சம்பவத்தன்று இவர் ஒரு வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக கூறப்படுகிறது.

அப்போது, அங்கு இளம்பெண் ஒருவர் குளித்துக் கொண்டு இருந்தார். வீட்டில் யாரும் இல்லாததை அறிந்த மனோகுமார், அந்த பெண் குளிப்பதை எட்டிப்பார்த்தார். இதை பார்த்த அந்த பெண் அதிர்ச்சி அடைந்தார். பின்னர் அந்த பெண்ணிடம் மனோகுமார் பாலியல் சில்மிஷத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனால் திடுக்கிட்ட அந்த பெண் சத்தம் போடவே அங்கிருந்து மனோகுமார் தப்பி ஓடிவிட்டார்.

இதுகுறித்து அந்த பெண் தனது குடும்பத்தினரிடம் தெரிவித்தார். அவர்கள் உடனடியாக குருவிகுளம் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி மனோகுமாரை அதிரடியாக கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நெல்லையப்பர் கோவில் தேரோட்டம் : காவல்துறை முக்கிய அறிவுறுத்தல்கள்




திருநெல்வேலி, ஜூலை 5

பிரசித்தி பெற்ற நெல்லையப்பர் காந்திமதி அம்மன் கோயில் தேரோட்ட திருவிழா வருடம்தோறும் ஆனி மாதம் வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டுக்கான ஆனி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கி. நடைபெற்று வருகிறது. இந்த விழாவின் சிகர நிகழ்ச்சியாக தேரோட்டம் வருகிற 8ஆம்தேதிவிமரிசையாக நடைபெற உள்ளது.

இந்த நிலையில் நெல்லை காவல்துறை சில அறிவுறுத்தல்களை பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளது. அதன்படி அதிக சத்தங்களை எழுப்பக்கூடிய பீப்பிகளை பயன்படுத்தி பொதுமக்களுக்கு இடையூறு செய்தாலோ., ஜாதி கயிறு, ஜாதி பெயர் பொறிக்கப்பட்ட டிஷர்ட்டுகள், ஜாதி கொடிகள், ஜாதி தலைவர்களின் பெயர்களை சொல்லி கோஷங்கள் எழுப்பினாலோ கடும் நடவடிக்கை. குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆகியோர்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்

ரத வீதிகளில் மட்டும் 800 போலீசாரை நிறுத்த திட்டம். நான்கு ரத வீதிகளுக்குள்ளும் நுழையும் 22 இடங்களில் போலீசார் கடும் சோதனை செய்ய முடிவு. 1500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

டிரோன் கேமரா மூலம் அனைத்துமே காவல்துறையால் கண்காணிப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் நெல்லையப்பர் கோவில் தேரோட்டத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டம் ஒழுங்கை மீறி செயல்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மாணவிகளுடன் பேசியதால் பிளஸ்2 மாணவர் அடித்துக்கொலை.. சக மாணவர்கள் வெறிச்செயல்

ஈரோடு ஜூலை 5

ஈரோடு குமலன்குட்டை செல்வம் நகரை சேர்ந்தவர் சிவா. தனியார் கட்டுமான நிறுவன மேற்பார்வையாளர். அவருடைய மனைவி சத்யா. இவர்களுடைய மகன் மற்றும் மகள் உள்ளனர்.

இதில் சிவாவின் மகனான ஆதித்யா (17) குமலன்குட்டை அரசு மேல்நிலை பள்ளிக்கூடத்தில் பிளஸ்2 படித்து வந்தார். நேற்று முன்தினம் காலை ஆதித்யா பள்ளிக்கூடத்துக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு புறப்பட்டார். ஆனால் அவர் பள்ளிக்கூடத்துக்கு செல்லவில்லை.

மாலையில் பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள பகுதியில் சீருடை அணியாமல் சாதாரண உடையில் ஆதித்யா மயங்கி நிலையில் கிடந்தார். அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே ஆதித்யா உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து ஆதித்யாவின் சாவில் சந்தேகம் இருப்பதாக அவரது பெற்றோர் ஈரோடு வீரப்பன்சத்திரம் போலீசாரிடம் தெரிவித்தனர். இதையடுத்து ஆதித்யாவின் உடல் பிரேத பரிசோதனைக்காக பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்று காலை குமலன்குட்டை அரசு பள்ளிக்கூடத்துக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. மேலும், புகார் கொடுக்க ஈரோடு வீரப்பன்சத்திரம் போலீஸ் நிலையத்துக்கு ஆதித்யாவின் பெற்றோரும், உறவினர்களும் சென்றனர். அங்கு தங்களது மகனை அடித்துக்கொலை செய்த சக மாணவர்களை கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்து கதறி அழுதனர்.



மேலும், கைது செய்யும் வரை மகனின் உடலை பெறமாட்டோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அப்போதுதுக்கம்தாங்காமல் பெண் ஒருவர் மயங்கினார். அவரை உறவினர்கள் ஆசுவாசப்படுத்தினர்.

அப்போது ஆதித்யாவை கொலை செய்த மாணவர்களை கைது செய்யாவிட்டால் கலெக்டர் அலுவலகம் முன்பு எனது மனைவியுடன் தீக்குளித்து தற்கொலை செய்து கொள்வேன் என்றும் சிவா மிரட்டல் விடுத்தார். மேலும் அவர்கள் போலீஸ் நிலையத்தில் இருந்து கலெக்டர் அலுவலகம் நோக்கி அழுது கொண்டே அங்கிருந்து புறப்பட்டு சென்றனர். போலீஸ் நிலையத்தில் இருந்து சிறிது தூரம் சென்றதும் அவர்களை போலீசார் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

ஆதித்யாவின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஈரோடு டவுன் போலீஸ் துணை சூப்பிரண்டு முத்துக்குமரன் தலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் செந்தில்பிரபு, மணிகண்டன் மற்றும் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது அவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது உறவினர்கள் கூறும் போது, ஆதித்யா பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை என்ற தகவலை பெற்றோருக்கு பள்ளிக்கூட நிர்வாகத்தின் சார்பில் தெரிவித்து இருக்க வேண்டும். மேலும் பள்ளிக்கூட வேலை நேரத்தில் மாணவர்கள் வெளியே வந்துள்ளனர். ஆதித்யாவை 2 மாணவர்கள் தாக்கியதாக போலீசார் கூறி வந்தனர்.

ஆனால் தாக்குதல் வீடியோவை பார்க்கும் போது சுமார் 10 மாணவர்கள்சேர்ந்து ஆதித்யாவை அடித்து கொன்று உள்ளனர். எனவே அவர்கள் அனைவரையும் கைது செய்ய வேண்டும். இந்த கொலையில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் போலீஸ் நிலையத்துக்கு வர வேண்டும் என்றனர்.

அதற்கு போலீசார் கூறுகையில், "உங்களது புகாரை எழுத்து பூர்வமாக எழுதி கொடுங்கள். உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்", என்று உறுதி அளித்தனர். அதன்பிறகு சமாதானம் அடைந்த அவர்கள் புகார் மனுவை கொடுத்தனர்.

இதையடுத்து ஈரோடு வீரப்பன்சத்திரம் கொலை வழக்காக பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மாணவர்களுக்கு இடையேநடந்தமோதல் காரணமாக ஆதித்யா சக மாணவர்களால் தாக்கி கொலை செய்யப்பட்டது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்து உள்ளது.

மேலும் ஆதித்யாவிடம் அதே பள்ளிக்கூடத்தில் படிக்கும் 2 மாணவர்கள்கடந்தஒருவாரத்துக்கு முன்பு தங்களது வகுப்பில் படிக்கும் மாணவிகளுடன் பேசக்கூடாது என்று மிரட்டி தகராறில் ஈடுபட்டது தெரியவந்தது. இந்த மாணவர்கள் தான் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள சந்தில் வைத்து ஆதித்யாவை தாக்கி உள்ளனர். இதில் படுகாயம் அடைந்த ஆதித்யா உயிரிழந்தது போலீசார் விசாரணையில் உறுதியானது.

இதைத்தொடர்ந்து போலீசார் மாணவர்கள் 2 பேரை கைது செய்தனர். இந்த கொலையில் மேலும் யாருக்காவது தொடர்பு உள்ளதா? என்று கைதானவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆதித்யாவின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தட்டச்சு, சுருக்கெழுத்து தேர்வு: 28ம் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 5

ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள தட்டச்சு, சுருக்கெழுத்து தேர்வுகளுக்காக கடந்த செவ்வாய்க்கிழமை (ஜூலை 1) முதல் தேர்வர்கள் விண்ணப்பித்து வருகின்றனர். தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்சார்பில், ஆண்டுக்கு 2 தடவை (பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதம்) நடத்தப்படுகின்றன. அதன்படி, ஆகஸ்ட் மாத தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக, தொழில்நுட்பக் கல்வி ஆணையரும், தொழில்நுட்பத் தேர்வுகள் வாரியத்தின் தலைவருமான ஜெ. இன்னசென்ட் திவ்யா வெளியிட்டிருந்த அறிவிப்பில், ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகளில் கலந்துகொள்ள விரும்புவோர் www.dte.tn.gov.in என்ற இணைய தளத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.

இணையதளம் மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வரும் 28ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இணைய விண்ணப்பத்தில் திருத்தம் செய்ய விரும்பினால் ஜூலை 30 முதல் ஆக.1ம் தேதி வரை திருத்தம் செய்து கொள்ளலாம். புதுமுக இளநிலை, இளநிலை தேர்வுக்கு ரூ.100ம், இடைநிலை தேர்வுக்கு ரூ.120ம், முதுநிலை தேர்வுக்கு ரூ.130ம், உயர் வேகம் தேர்வுக்கு ரூ.200ம் தேர்வுக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

5.7.2025

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து மீண்டும் அதிகரிப்பு: சுற்றுலா பயணிகளுக்கான தடை நீடிப்பு



மேட்டூர், ஜூலை 5

கர்நாடகா, கேரளா மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக கிருஷ்ணராஜசாகர், கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதன்காரணமாககபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகள் தனது முழு கொள்ளளவை எட்டியது.

இந்த இரண்டு அணைகளில் இருந்தும் தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் கர்நாடக தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு கரைபுரண்டு வந்தது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்த சூழலில் கர்நாடகா மாநில அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு 21 ஆயிரத்து 670 கன அடியாக குறைக்கப்பட்டதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்தும் படிப்படியாக குறைய தொடங்கியது. நேற்று முன்தினம் காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 43 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது.

இந்த நீர்வரத்து மேலும் குறைந்து மாலை 4 மணி நிலவரப்படி 28 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. இந்த நீர்வரத்து இரவு 7 மணி நிலவரப்படி 23 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. இருப்பினும் ஒகேனக்கல் ஐந்தருவி, சினி பால்ஸ் ஆகிய அருவிகளை மூழ்கடித்தபடி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.


ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தை மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் பிலிகுண்டுலுவில் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். போலீசார், ஊர்க்காவல் படையினர், வருவாய்துறையினர்காவிரி கரையோர பகுதிகளில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவை பொறுத்து மேட்டூர் அணைக்கு தண்ணீர் வருகிறது. கடந்த 1ந் தேதி அணைக்கு வினாடிக்கு 56 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. இந்த நீர்வரத்து நேற்று முன் தினம் காலை குறைந்து வினாடிக்கு 35 ஆயிரம் கனஅடியானது. மாலையில் அது மேலும் குறைந்து வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. அணை தனது முழு கொள்ளளவான 120 அடியை எட்டி இருப்பதால் அணைக்கு வரும் தண்ணீர் அப்படியே வெளியேற்றப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் நேற்று முன் தினம் மாலை அணையில் இருந்து கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி வீதமும், டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 22 ஆயிரத்து 500 கனஅடி வீதமும் நீர்மின் நிலையங்கள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. மீதமுள்ள 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் அணையின் உபரி நீர் போக்கியான 16 கண் மதகுகள் வழியாக திறந்து விடப்பட்டது.

இந்நிலையில் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து தற்போது மீண்டும் அதிகரித்து, வினாடிக்கு 28,000 கன அடியாக உயர்ந்துள்ளது. பாதுகாப்பு கருதி அருவி மற்றும் ஆற்று பகுதியில் குளிக்கவும் பரிசல் சவாரி மேற்கொள்ளவும் விதிக்கப்பட்ட தடை 10வது நாளாக நீடிக்கப்பட்டுள்ளது.

## தர்மபுரி: சாலை அருகே இறந்து கிடந்த ஆண் ஒட்டகம்: போலீசார் விசாரணை



தர்மபுரி, ஜூலை 5

தர்மபுரி அருகே அதியமான்கோட்டை ஒசூர் சாலையில் உள்ள ஒருதனியார்நூற்பாலை பகுதியில் சாலையோரம் ஒரு ஆண் ஒட்டகம் முன் கால்கள் கட்டப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தது. நேற்று காலை அந்த வழியாக சென்றவர்கள் அதனை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.இதுதொடர்பாகதர்மபுரிடவுன்போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் போலீசார் விரைந்து வந்து சாலையோரம் கிடந்த ஆண் ஒட்டகம் குறித்து விசாரணை நடத்தினர். மேலும் இது தொடர்பாக வருவாய்த்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையினருக்கு போலீசார் தகவல் கொடுத்தனர். போலீசார் அந்த ஒட்டகத்தை கிரேன் மூலம் மீட்டு தர்மபுரி கால்நடை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். நீர்ச்சத்து குறைவு காரணமாக இந்த ஒட்டகம் இறந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த ஆண் ஒட்டகம் தருமபுரி கால்நடை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. சாலையோரம் ஆண் ஒட்டகம் இறந்து கிடந்தசம்பவம் தொடர்பாகபோலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த ஒட்டகத்தை நேற்று அதிகாலை யாரோ மர்ம ஆசாமிகள்லாரியில் கொண்டு வந்து வீசிவிட்டு சென்றதாக கூறப்படுகிறது. இந்த ஒட்டகத்தை மர்ம ஆசாமிகள் எங்கிருந்து கொண்டு வந்தார்கள். எந்த ஊருக்கு இந்த ஒட்டகத்தை கொண்டு செல்ல முயன்றார்கள் என்ற விவரம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


## இன்றைய ராசி பலன்கள் (5.7.2025)

- மேஷம்: நண்பர்களுடன் சந்தோஷ நேரம். சொத்து விவாதங்களில் எச்சரிக்கை தேவை.
- ரிஷபம்: வெளிநாட்டு வாய்ப்பு, மதிப்பு அதிகரிப்பு காணப்படும்.
- மிதுனம்: நிதி மற்றும் வேலை சார்ந்த சாதகமான நிலை.
- கடகம்: வியாபாரத்தில் வளர்ச்சி. குடும்பத்தில் விவாதங்களை தவிர்க்கவும்.
- சிம்மம்: புதிய வணிக வாய்ப்புகள். குடும்பத்தில் மகிழ்ச்சி.
- கன்னி: உடல்நலப் பிரச்சினைகள், வணிக இழப்புகள். எதிரிகளிடம் கவனம் தேவை.
- துலாம்: மகிழ்ச்சியான நாள். வணிக ஒப்பந்தங்களில் லாபம்.
- விருச்சிகம்: குடும்பத்தில் மகிழ்ச்சி. நிலுவையில் உள்ள பணிகள் முடியும்.
- தனுசு: திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.
- மகரம்: பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் வாக்குவாதங்களை தவிர்க்கவும்.
- கும்பம்: தொழிலில் வெற்றி. காதல் உறவில் இனிமை.
- மீனம்: முதலீடுகளைத் தவிர்க்கவும். கலவையான பலன்கள்.



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் மற்றும் தொ.மு.ச.நலச் சங்க மண்டல செயலாளர் ஜீவா.டி. ஜெயக்குமார் ஆசிரியை இந்திராணி ஆகியோர் புதல்வி மோனிகா,M.Sc., B.Ed., PGDB.,சேலம் பாஸ்கரன் கவிதா ஆகியோர் திருமண வரவேற்பு நிகழ்ச்சி தாராபுரம் அரிமா அரங்கத்தில் நடந்தது. தமிழக அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன்ம ற்றும் கயல் விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி தி.மு.க. முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். கல்வியாளர் டாக்டர் ஜெய்லானி மணமக்களுக்கு பரிசு வழங்கி வாழ்த்தினார். வரவேற்பு நிகழ்ச்சியில்ஏராளமானவர்கள்கலந்து கொண்டார்கள்.

## தூத்துக்குடி விமான நிலையத்தில் இரவு நேர விமானப் போக்குவரத்து துவக்கம்




தூத்துக்குடி, ஜூலை 5

தூத்துக்குடி விமான நிலையத்திலிருந்து கடந்த 5 வருடங்களுக்கு முன்பு 03072020 அன்று இரவு நேர விமானப் போக்குவரத்து துவங்கப்பட்டது. ஆனால் விமான ஓடு பாதை விரிவாக்கம் மற்றும் விமான நிலைய விரிவாக்கம் ஆகிய பணிகளால் இரவு நேர போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தூத்துக்குடி விமான நிலைய வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாக இன்று முதல் இரவு நேர விமானப் போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு வந்த இண்டிகோ விமானம் மாலை 6:20 மணிக்கு தரை இறங்கியது. பின்னர் இரவு 7 மணிக்கு அதே விமானம் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றது.

தூத்துக்குடி விமான நிலையத்திலிருந்து இரவு நேர விமான போக்குவரத்திற்கு கடந்த ஒரு வாரத்திற்கு முன்புதான் இந்திய விமான நிலையங்களின் ஆணையம் அனுமதி அளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை: மின்சாரம் தாக்கி பள்ளி மாணவன் உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து போராட்டம்




சென்னை, ஜூலை 5

சென்னை திருவொற்றியூரில்மின்சாரம் தாக்கி பள்ளி மாணவன் உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து நூற்றுக்கும் மேற்பட்டோர் காவல்நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். திருவொற்றியூரில் கடந்த புதன்கிழமை இரவு, தேங்கி நின்ற மழைநீரில் நடந்து சென்ற பள்ளி மாணவன் மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

மின்வாரிய அதிகாரிகளின் அலட்சியத்தால் பிள்ளையை பறிகொடுத்ததாக குற்றம்சாட்டிய உறவினர்கள், தற்போது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறி அப்பகுதி மக்களுடன் இணைந்து திருவொற்றியூர் காவல் நிலையம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## தர்ஷனின் "ஹவுஸ் மேட்ஸ்" ரிலீஸ் தேதி அறிவிப்பு




நடிகராக மட்டுமில்லாமல் தயாரிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார் சிவகார்த்திகேயன். சிவகார்த்திகேயன் புரோடக்ஷன்ஸ் சார்பாக வாழ் , குரங்கு பெடல் , கொட்டுக்காளி , கனா ஆகிய திரைப்படங்கள் வெளியாகி ரசிகர்களை கவர்ந்துள்ளன. தற்போது சிவகார்த்திகேயன் தயாரிப்பு நிறுவனம் சார்பாக மற்றொரு படம் வெளியாக இருக்கிறது. தற்போது இவர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் மதராஸி படத்திலும், சுதா கொங்கரா இயக்கத்தில் பராசக்தி படத்திலும் நடித்து வருகிறார்.

பேண்டஸி ஹாரர் காமெடி படமாக உருவாகி இருக்கும் "ஹவுஸ் மேட்ஸ்".கதையின் நாயகனாக தர்ஷன்நடித்திருக்கிறார்.இவருடன்மிகமுக்கியமான கதாப்பாத்திரத்தில் காளி வெங்கட் நடித்திருக்கிறார். இவர்களுடன் இணைந்து அர்ஷா சாந்தினி பைஜூ , வினோதினி , தீனா , அப்துல் லீ , மாஸ்டர் ஹென்ரிக் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கின்றனர். ராஜவேல் எழுதி , இயக்கியுள்ளார். இத்திரைப்படத்தை விஜய பிரகாஷ் தயாரித்துள்ளார். இத்திரைப்படத்தை ப்ளே ஸ்மித் நிறுவனமும் சௌத் ஸ்டுடியோஸ் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளது.

இத்திரைப்படத்தை பார்த்த முன்னணி நடிகர் மற்றும் தயாரிப்பாளர் சிவகார்த்திகேயன் படக்குழுவை வாழ்த்தி, பாராட்டியுள்ளார். மேலும் இப்படத்தின் வெளியீட்டு உரிமையை கைப்பற்றி தனது தயாரிப்பு நிறுவனமான சிவகார்த்திகேயன் புரொடக்சன்ஸ் மூலம் உலகம் முழுவதும் வெளியிட உள்ளார்.

இந்த நிலையில், 'ஹவுஸ் மேட்ஸ்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்படம் ஆகஸ்ட் 1ம் தேதி வெளியாக உள்ளது.

## "கண்ணப்பா" "நெமலியாகவே வாழ்ந்தேன் பிரீத்தி முகுந்தன்

சமீபத்தில்வெளியானகண்ணப்பாபடத்தில்நெமலியாகநடித்தபிரீத்திமுகுந்தன்,பார்வையாளர்களிடமிருந்து பாராட்டுகளைப்பெற்றுள்ளார். இந்நிலையில், ஆறுமாதங்கள்இப்படத்தில்கதாபாத்திரமாகவேவாழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

பார்வையாளர்கள் தன் மீது பொழிந்த அனைத்து அன்பிற்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"உங்கள் வார்த்தைகள் என்னை எவ்வளவு மகிழ்ச்சியடையச் செய்தன என்பது உங்களுக்குத் தெரியாது. நான் படப்பிடிப்புத் தளங்களில் ஒரு நடிகராக இரண்டு வாரங்கள் மட்டுமே இருந்தேன். ஆறு மாதங்களாக, நான் நெமலியாகவே வாழ்ந்தேன். எனக்கு இதை சாத்தியமாக்கிய அனைவருக்கும், நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

## மலையாள சினிமாவில் அறிமுகமாகும் சாய் அபயங்கர்

பிரபல பின்னணி பாடகர்கள் திப்பு, வாரிணி தம்பதியின் மகன் சாய் அபயங்கர். இவர் 'கட்சி சேர' என்ற பாடலை பாடி, இசையமைத்து வெளியிட்டார். இந்த பாடல் மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்று இணையத்தில் வைரலானது. அதனை தொடர்ந்து 'ஆச கூட'என்ற பாடலை வெளியிட்டார். இந்தப் பாடலும் இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்த இளம் வயதிலேயே அவர் இசையமைத்த இரு பாடல்களும் மிகப்பெரிய வெற்றிப் பெற்றது. இதனால்அவருக்கு லோகேஷ்கனகராஜ்தயாரிக்கும் 'பென்ஸ்'படத்திற்கு இசையமைக்கும்வாய்ப்புகிடைத்தது. அதனை தொடர்ந்து ஆர்.ஜே.பாலாஜி இயக்கும் சூர்யா 45 படத்திற்கும் இசையமைக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. சன் பிக்சர்ஸின்அல்லுஅர்ஜூன்படம்,சூர்யாவின்கருப்பு,லாரன்ஸின்பென்ஸ்உள்ளிட்ட10படங்களுக்குஒப்பந்தமாகியுள்ளார்.

மலையாள சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஷேன் நிகாம் முக்கியமானவர். இவர் சில மாதங்களுக்கு முன் மெட்ராஸ்காரன் என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக தமிழில் அறிமுகமானார். இப்படத்தில் கலையரசன், நிஹாரிகா, ஐஷ்வர்யா முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தனர்.

ஷேன் நிகாமின் 25 வது திரைப்படமான 'பல்டி' படத்தை அறிமுக இயக்குநரான உன்னி சிவலிங்கம் இயக்கியுள்ளார். இப்படத்தில் இவருடன் பிரீத்தி அஸ்ரானி மற்றும் சாந்தனு பாக்கியராஜ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படம் கபடி விளையாட்டை மையமாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படமாகும்.

இந்நிலையில் 'பல்டி' படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். இது இவர் இசையமைக்கும் முதல் மலையாள திரைப்படமாகும். இதற்கு ஒரு புரோமோ வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில் மோகன்லால் இவரை வரவேற்கும் படியான ஆடியோ இடம்பெற்றுள்ளது. படத்தை சந்தோஷ் குருவில்லா தயாரிக்க தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் வெளியாக இருக்கிறது. திரைப்படம் ஓணத்தை முன்னிட்டு வெளியாகும் என தெரிவித்துள்ளனர்.

## 2வது டெஸ்ட்: ஹாரி புரூக் ஜேமி சுமித்தின் 303 ரன்கள் பார்ட்னர்ஷிப்பை உடைத்த ஆகாஷ் தீப்



இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2வது போட்டி பர்மிங்காமில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2வது நாள் ஆட்டநேர முடிவில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 77 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 18 ரன்களுடனும் , ஹாரி புரூக் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இத்தகைய சூழலில் 3வது நாள் ஆட்டம் இன்று தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஜோ ரூட் (22 ரன்கள்), பென் ஸ்டோக்ஸ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் ஒரே ஓவரில் சிராஜ் காலி செய்தார். இதனால் இங்கிலாந்து அணி 84 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான சூழலில் 6வது விக்கெட்டுக்கு கைகோர்த்த ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி சிறப்பாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடியில் இருவரும் சதமடித்து அசத்தினர். இவர்களின் பார்ட்னர்ஷிப்பை உடைக்க முடியாமல் இந்திய அணி திணறியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் 150 ரன்களை கடந்து அசத்தினர். இவர்களது பார்ட்னர்ஷிப்பும் 300 ரன்களை கடந்தது.

இந்திய அணியை அச்சுறுத்தி வந்த இந்த ஜோடியை ஒரு வழியாக ஆகாஷ் தீப் உடைத்தார். அவரது பந்துவீச்சில் ஹாரி புரூக் 158 ரன்களில் போல்டானார். 6வது விக்கெட்டுக்கு ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி 303 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தியது குறிப்பிடத்தக்கது. அடுத்து வந்த கிறிஸ் வோக்சையும் (5 ரன்கள்) ஆகாஷ் தீப் காலி செய்தார்.

தற்போது வரை இங்கிலாந்து அணி 87 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 395 ரன்கள் அடித்துள்ளது. ஜேமி சுமித் 173 ரன்களுடனும், பிரைடன் கார்ஸ் ரன் எதுவுமின்றியும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணி இன்னும் 192 ரன்கள் பின்தங்கி உள்ளது.

## பர்மிங்காம் டெஸ்ட்: 3ம் நாள் முடிவில் 244 ரன்கள் முன்னிலை பெற்ற இந்தியா

இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2வது போட்டி பர்மிங்காமில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2வது நாள் ஆட்டநேர முடிவில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 77 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 18 ரன்களுடனும் , ஹாரி புரூக் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இத்தகைய சூழலில் 3வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஜோ ரூட் (22 ரன்கள்), பென் ஸ்டோக்ஸ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் ஒரே ஓவரில் சிராஜ் காலி செய்தார். இதனால் இங்கிலாந்து அணி 84 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான சூழலில் 6வது விக்கெட்டுக்கு கைகோர்த்த ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி சிறப்பாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடியில் இருவரும் சதமடித்து அசத்தினர். இவர்களின் பார்ட்னர்ஷிப்பை உடைக்க முடியாமல் இந்திய அணி திணறியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் 150 ரன்களை கடந்து அசத்தினர். இவர்களது பார்ட்னர்ஷிப்பும் 300 ரன்களை கடந்தது. இந்திய அணியை அச்சுறுத்தி வந்த இந்த ஜோடியை ஒரு வழியாக ஆகாஷ் தீப் உடைத்தார். அவரது பந்துவீச்சில் ஹாரி புரூக் 158 ரன்களில் போல்டானார். 6வது விக்கெட்டுக்கு ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி 303 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தியது குறிப்பிடத்தக்கது. பின்னர் களமிறங்கிய வீரர்கள் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. கிறிஸ் வோக்ஸ் 5 ரன்களிலும், பிரைடன் கார்ஸ், ஜோஷ் டாங் மற்றும் ஷோயப் பஷிர் ஆகியோர் ரன் எதுவுமின்றியும் ஆட்டமிழந்தனர். முடிவில் 89.3 ஓவர்கள் தாக்குப்பிடித்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 407 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இது இந்திய அணியை விட 180 ரன்கள் குறைவானதாகும். இங்கிலாந்து தரப்பில் ஜேமி சுமித் 184 ரன்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இந்தியா தரப்பில் முகமது சிராஜ் 6 விக்கெட்டுகளும், ஆகாஷ் தீப் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து இந்திய அணி தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக கே.எல். ராகுலும், ஜெய்ஸ்வாலும் களமிறங்கினர். ஜெய்ஸ்வால் 28 ரன்கள் எடுத்து டாங்கு பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். 3ம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 64 ரன்கள் எடுத்துள்ளது. அத்துடன், 244 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. கே.எல்.ராகுல் 28 ரன்னுடனும், கருண் நாயர் 7 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். நாளை 4ம் நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.